61

# தேவை: எண்ணப்போக்கை ஒழுங்குபடுத்துதல்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #25*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

  P. *பெரேயாவில் ஊழியம் (தொடர்ச்சி).*

    *8. பலவகைப் போதனைகள் (லூக். 17:1-10).*

  Q. *பெத்தானியாவுக்கு.*

    *1. லாசருவை எழுப்புதல் (யோவா. 11:1-46).*

    *2. சனதெரீனின் கட்டளை (யோவா. 11:47-53).*

  R. *பலஸ்தீனத்தில் கடைசிப் பயணம்.*

    *1. எப்பிராயீமில் ஓய்வு (யோவா. 11:54).*

    *2. சமாரியா கலிலேயா ஊடாக (லூக். 17:11ஆ).*

  S. *எருசலேமுக்குக் கடைசிப் பயணம் (லூக். 17:11அ).*

    *1. பத்து தொழுநோயாளிகளைக் குணமாக்குதல் (லூக். 17:12-19).*

    *2. இராஜ்யத்தைப் பற்றிப் போதித்தல் (லூக். 17:20-37).*

    *3. ஜெபம் பற்றிய உவமைகள்.*

      a. *விடாமுயற்சியான விதவையின் உவமை (லூக். 18:1-8).*

      b. *பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் உவமை (லூக். 18:9-14).*

### அறிமுகம்

*நாம் யாவரும், அவ்வப்போது, "மோசமான எண்ணப்போக்கினல்" துன்புறுகின்றோம் - மற்றும் நாம் அவ்வாறு துன்புறும்போது, அது நமது வாழ்வின் எல்லா அம்சங்களையும் பாதிக்கிறது. ஞானமுள்ள மனிதர், ஒரு மனிதன், "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்று கூறினார் (நீதி. 23:7). இதை ஜார்ஜ் பெய்லி அவர்கள் பின்வருமாறு கூறக்கேட்டுள்ளேன்: "நீங்கள் என்னவாயிருக்கின்றீர்கள்*

*என்று நீங்கள் நினைக்கின்றபடி இல்லாதிருக்கலாம், ஆனால் நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ, அதன்படியே இருக்கின்றீர்கள்."* ஒவ்வொருவருக்கும் அவ்வப்போது எண்ணப்போக்கை ஒழுங்குபடுத்துதல் தேவைப்படுகிறது.[1]

இந்தப் படிப்பில் நாம், இயேசுவைப் பலஸ்தீனத்தில் ஒரு கடைசிப் பயணத்தில் காண்போம். பெரேயாவிலிருந்து பெத்தானியாவுக்கும், பெத்தானியாவிலிருந்து வனாந்தரத்திற்கும் வனாந்தரத்திலிருந்து சமாரியா கலிலேயாவுக்கும் அவரது பயணங்களைப் பற்றி நாம் கற்றறிவோம். கடைசியில் நாம், அவர் சிலுவையை நோக்கிய தமது வழியில் எருசலேம் நோக்கிச் செல்லத் தொடங்கியதைக் காண்போம். கிறிஸ்து இப்பூமியில் தமது காலவேளையானது முடிவை நெருங்கிற்று என்று அறிந்தவராக, தமது போதனையை வலுப்படுத்தினார். போதனையில் பெரும்பகுதி அவரது சீஷர்களை நோக்கி இயக்கப்பட்டது, அதில் அதிகமான பகுதி பரிசேயர்களுடன் தொடர்புடையதாக இருந்தது (லூக். 17:20; 18:10; யோவா. 11:46). இவை யாவையுமே, ஒரு வகையில் அல்லது இன்னொரு வகையில், ஏற்புடைய எண்ணப்போக்குகளின் முக்கியத்துவத்துடன் தொடர்புடையவைகளாய் இருந்தன. முதல் நூற்றாண்டில் கர்த்தரைப் பின்பற்றியவர்களுக்கு, எண்ணப்போக்கை ஒழுங்குபடுத்துதல் தேவைப்பட்டது - இன்றைய நாட்களில் நமக்கும் கூட இது தேவைப்படுகிறது.

## பாவத்தைப்பற்றிய உங்கள் எண்ணப்போக்கை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள் (லூக். 17:1-10)

நமது முந்திய பாடமானது உவமைகளின் ஒரு வரிசையைச் சித்தரித்தது, அவற்றில் பெரும்பான்மையானவைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பரிசேயர்களுக்குப் பதிலுரையாக இருந்தன (லூக். 14:1, 12, 16; 15:1-3; 16:13, 14). இந்த வரிசையைத் தொடர்ந்து இயேசு தமது சீஷர்களுக்குப் பொதுவான அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்.

### பாவத்தைப் பற்றிய எண்ணப்போக்கு: அக்கறை (வ. 1-3ஆ)

இந்த அறிவுறுத்தலானது, "சிறுவர்களுக்கு இடறல் ஏற்பட" காரணமாகின்றவர்களுக்கு ஒரு சாபத்தைக் கூறுதலுடன் தொடங்கியது (வ. 1, 2).[2] இயேசு சிலவேளைகளில், "சிறுவர்கள்" என்ற சொற்றொடரை, புரிந்து கொள்ளுதலிலும் ஊறுபடும் தன்மையிலும் இன்னும் பிள்ளையாக இருந்த தமது சீஷர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தினார். சந்தர்ப்பப் பொருளில், பரிசேயர்களே குற்றம் இழைத்திருந்த கட்சியினராக இருந்தனர் (16:14), ஆனால் நாம் ஒவ்வொருவருமே, பிறர் இடறிவிழுதலுக்குக் காரணமாகாதபடி கவனமாக இருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (1 கொரி. 8:13ஐக் காணவும்). கிறிஸ்து, "உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!" என்று தமது சீஷர்களை எச்சரித்தார் (லூக். 17:3அ). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால் இது, "இப்போது குறிப்பிட்ட பாவத்தைச் செய்து குற்றம் அடைந்து விடாதீர்கள்" என்று கூறுவதாக உள்ளது.

அவர் தொடர்ந்து, "உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்

*செய்தால், அவனைக் கடிந்துகொள்" (வ. 3ஆ) என்று கூறினார். இது ஒரு பிரபலமான போதனையாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு அத்தியாவசியமான போதனையாக உள்ளது. ஒரு சகோதரர் தமது வாழ்வில், தமது ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாக்கும் பாவத்தைக் கொண்டிருந்தால், நாம் அதைக் கண்டும் காணாதிருக்கத் துணியக் கூடாது. அன்பானது, நாம் அவரை எதிர்த்து நின்று அவரை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்று நம்மிடத்தில் வேண்டுதல் செய்கிறது (யாக். 5:19, 20). இருப்பினும் நாம் எப்போதும், "சாந்தமுள்ள ஆவியுடன்" (கலா. 6:1) மற்றும் அன்புடன் (எபே. 4:15) அவ்வாறு செய்வோமாக.[3]*

***பாவிகளைப் பற்றிய எண்ணப்போக்கு: பரிவிரக்கம் (வ. 3இ-6)***

*நாம் கடிந்துகொள்வதோடு நின்றுவிடக் கூடாது; நாம் மன்னிக்கத் தயாராகவும் இருக்க வேண்டும் (வ. 3இ). J. W. மெக்கார்வீ அவர்கள், நீதியானது கடிந்துகொள்ள கடமைப்பட்டதாக இருக்கிற வேளையில், அன்பானது மன்னிக்க கடமைப்பட்டதாக இருக்கிறது என்று கருத்துத் தெரிவித்தார்.[4] கர்த்தர், தமது பின்பற்றாளர்களுக்கு விரோதமாய் யாரேனும் ஒரு நாளில் ஏழுமுறை குற்றம் செய்தாலும், அவர்கள் அவ்வாறு குற்றம் செய்த வரை மன்னிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று கூறினார் (வ. 4).[5]*

*இது சீஷர்களுக்குக் கடினமானதாக ஒலித்தது: அவர்கள், "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும்!" என்று கதறினார்கள் (வ. 5). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீர் இப்போது விரிவாக்கிய அறைகூவலைச் சந்திக்கத் தேவையான விசுவாசத்தை எங்களுக்குத் தாரும்!" என்று அவர்கள் கேட்டனர்.[6] அவர்களின் விசுவாசத்தை எவ்வாறு வர்த்தித்துக் கொள்ள முடியும் என்று இயேசு அவர்களுக்குக் கூறியிருக்க முடியும் (ரோமர் 10:17; யோவா. 17:20; 20:31ஐக் காணவும்). அதற்குப் பதிலாக அவர் உண்மையில், அவர்களிடத்தில் - விசுவாசத்தினுடைய வல்லமையின் விவரிப்பு ஒன்றை பயன்படுத்தி - விசுவாசத்தின் முக்கியத் துவத்தை உய்த்துணர்ந்ததற்காக அவர்களைப் புகழ்ந்தார் (லூக். 17:6).[7]*

***பாவத்தை - நியாயந்தீர்ப்பவர் பற்றிய எண்ணப்போக்கு: நெஞ்சார்ந்த வருத்தம் (வ. 7-10)***

*பொதுவான அறிவுறுத்துதல் ஒரு எச்சரிக்கையுடன் முடிவடைந்தது. பாவம் மற்றும் பாவிகளைப் பற்றி ஒருவர் எப்போதும் சரியான எண்ணப் போக்கைக் கொண்டிருக்க முடிந்தால் நிலைமை என்ன? இது (பாவிகளை நியாயந்தீர்க்கின்றவரான) தேவனை இவருக்குக் கடமைப்பட்ட வராக்குமா? இல்லை. பரிசேயர்கள் தங்கள் "நற்தன்மை" என்பது தங்களுக் குப் பரலோகத்தில் ஒரு இடத்தை உறுதிப்படுத்தும் என்று நினைத்தார்கள் (லூக். 18:9-12ஐக் காணவும்), ஆனால் அவர்கள் அந்த எண்ணத்தில் தவறியிருந்தார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காக, தனது கடமையைச் செய்தமைக்காக விசேஷித்த அங்கீகாரம் எதையும் பெற்றிராத ஒரு வேலைக்காரனைப் பற்றிக் கிறிஸ்து கூறினார் (லூக். 17:7-9). "அப்படியே, நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும்,*

*செய்தபின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" என்று கர்த்தர் முடித்தார் (வ. 10).*

*"கட்டளையிடப்பட்ட எல்லாவற்றையும்" நம்மில் எவரும் ஒருக்காலும் செய்ததில்லை அல்லது செய்யப்போவதுமில்லை (ரோமர் 3:10; சங். 143:2க் காணவும்). அப்படி நாம் செய்ய முடிந்தாலும், அப்போதும்கூட நாம் "அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாகவே" இருப்போம். லூக்கா 17:10 வசனமானது தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தின் அவசியம் பற்றி முழங்குகிறது.*

## இயேசுவின் மீதான உங்கள் எண்ணப்போக்கை ஒழுங்குபடுத்துங்கள் (யோவா. 11:1-54)

*பெரேயாவில் இயேசுவின் ஊழியம், எருசலேமுக்கு அருகில் இருந்த பெத்தானியாவில் (வ. 18) இருந்து வந்த ஒரு அவசரச் செய்தியினால் (வ. 1) இடைமறிக்கப்பட்டது. கிறிஸ்துவின் நண்பர்களான மரியாளும் மார்த்தாளும்[8] தங்கள் சகோதரனான லாசரு வியாதிப்பட்டிருந்ததாக வார்த்தை சொல்லியனுப்பினார்கள் (வ. 3). ஆச்சரியத்திற்கு உரிய வகையில் இயேசு, இந்த வேண்டுகோளுக்குப் பதில் அளிக்குமுன்பு இரண்டு நாட்கள் காத்திருந்தார் (வ. 6). இந்தத் தாமதமானது மாறுபட்ட கருத்தினாலானதாக இருந்ததில்லை என்று யோவான் வலியுறுத்தினார்; இந்த மனிதரையும் இவரது சகோதரிகளையும் கிறிஸ்து நேசித்தார் (வ. 5). இந்தத் தாமதமானது, இயேசு பெத்தானியாவுக்கு வருமுன்பு லாசருவினுடைய மரணத்தை உறுதி செய்து கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட வில்லை. கடைசியில் கிறிஸ்து பெத்தானியா வந்து சேர்ந்தபோது, லாசரு மரித்து ஏற்கனவே நான்கு நாட்கள் ஆகியிருந்தது என்ற உண்மையை (வ. 17, 39) ஆழ்ந்து சிந்திக்கும் போது, செய்தி வந்து சேர்ந்தவுடன் இயேசு புறப்பட்டிருந்தாலும், அவர் தமது நண்பர் மரிக்குமுன் அங்கு வந்து சேர்ந்திருக்க முடிவதற்கு மனித ரீதியாகச் சாத்தியமான வழி எதுவும் அநேகமாக இருந்ததில்லை.[9] ஒருவேளை, இரண்டு நாட்கள் காத்திருத்தல் என்பது, லாசரு உண்மையிலேயே மரித்தார் என்பதை எவரொருவரின் சிந்தையிலும் சந்தேகத்திற்கு இடமின்றி விட்டு வைப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கலாம் (வ. 39). இது மயக்கம் தெளிவித்தலாக இன்றி உயிர்ப்பித்தலாக இருக்கும்.*

*தாமதத்திற்குக் காரணம் எதுவாக இருப்பினும், தேவனுடைய திட்டங்களும் நோக்கங்களும், இயேசு அவரது மகன் என்பதை நியாயமான எந்த சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபிப்பதற்காக இந்தத் துன்பத்தைப் பயன்படுத்தும் (வ. 4, 15, 42). நீங்கள் இந்த வரலாற்றை வாசிக்கையில், "ஆகையால்" (வ. 16, 20, 32, 33, 45) என்ற வார்த்தைக்குக் கவனம் செலுத்துங்கள். (தமிழில் "ஆகையால்" என்ற வார்த்தை காணப்படுவதில்லை.) அந்த வார்த்தையானது நிகழ்ச்சிகளின் வரிசைத் தொடரை நிலைநாட்டுவதாக மட்டுமின்றி, நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் காரணம் ஒன்று இருந்தது என்பதை வலியுறுத்துவதாகவும் இருந்தது. ஒரு தெய்வீக நோக்கம்*

*செயல்படுத்தப்பட்டிருந்தது.*

*லாசருவை உயிர்ப்பித்தல் என்பது "கிறிஸ்துவின் ஊழியத்தில் உச்சகட்டமான அற்புதம்" என்று அழைக்கப்பட்டுள்ளது.*[10] *இதற்கு முன்பு இயேசு மரித்தோரை உயிர்ப்பித்திருந்த - நாயீன் நகரத்து விதவையின் மகன் (லூக். 7:11-17) மற்றும் யாவீருவின் மகள் (மாற். 5:22-24, 35-43) என்ற - இரு விவரங்களை நாம் படித்துள்ளோம், ஆனால் அந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கு எழுத்தாளர்கள், வார்த்தைகளில் சிக்கனத்தைப் பயன் படுத்தினார்கள். லாசருவை உயிர்ப்பித்தல் மற்றும் அதன் பின்பு நடந்தவைகள் ஆகியவற்றிற்கு ஒரு முழு அத்தியாயம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த உயிர்ப்பித்தல் மாறுபட்டதாக இருந்தது: இது கலிலேயா என்ற தூர இடத்தில் அல்ல, ஆனால் இயேசுவின் விரோதிகளினுடைய பின்முற்றத்தில் நடைபெற்றிருந்தது. இது எவரொருவரும் மறுக்க முடியாத அற்புதமா யிருக்கும் (யோவா. 11:47), இது அந்தப் பகுதி முழுவதையும் ஆச்சரியத் தினால் நிறைத்த அற்புதமாகவும் இருக்கும் (யோவா. 12:9), மற்றும் இது இயேசுவின் விரோதிகளின் மத்தியில்கூட [அவர்மீது] விசுவாசத்தை உண்டாக்கிய அற்புதமாக இருக்கும் (யோவா. 11:45; 12:11). இது கிறிஸ்துவின் அடைவிடத்தை/மரணத்தை முத்திரையிட்ட திட்டவட்ட மான ஒரு நிகழ்ச்சியாக இருக்கும் (யோவா. 11:47-53).*

### ஒரு சகோதரியின் எண்ணப்போக்கு: கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்க வேண்டும் (வ. 17-46)

*செய்தி வந்து இரண்டு நாட்களுக்குப் பின்பு, இயேசு யூதேயாவுக்குத் திரும்புவதற்கான தமது உள்ளக் கருத்தை அறிவித்தார் (11:7). அங்கு பதுங்கியிருந்த அபாயத்தைப் பற்றி அவரது சீஷர்கள் அவருக்கு நினைவு படுத்தினார்கள் (11:8; 10:31, 39ஐக் காணவும்). அவர்கள் தங்கள் எஜமானரின் மனதைத் திருப்ப முடியாமற் போனபோது, தாங்கள் மரணத்திற்குப் போவதை நிச்சயமாக உணர்ந்தபோதிலும், அவருடன் செல்வதற்கு முடிவுசெய்தார்கள் (11:16).*[11]

*கிறிஸ்து பெத்தானியாவின் வெளிப்புறத்தை அடைந்தபோது (வ. 30), அவர் மார்த்தாளால் சந்திக்கப்பட்டார் (வ. 20). அவரைக் கண்டபோது அவள் கூறிய வார்த்தைகள், அவரது வல்லமையில் அவள் பொதுவாகக் கொண்டிருந்த விசுவாசத்தையும் மற்றும் குணமாக்குவதற்கான அவரது வல்லமையில் அவள் திட்டவட்டமாகக் கொண்டிருந்த விசுவாசத்தையும் வெளிப்படுத்தின (வ. 21, 22). அவள் தனது சகோதரனை எழுப்புவதற்குக் கர்த்தர் கொண்டிருந்த மனக்குறிப்பை அறிந்திருந்தமைக்கான குறிப்பு எதுவும் இல்லை என்பது உறுதி (வ. 24, 39). மார்த்தாளுக்கும் இயேசுவுக்கும் இடையில் நடைபெற்ற வார்த்தைப் பரிமாற்றமானது நினைவுகூரத்தக்க இரண்டு கூற்றுக்களை அடக்கியுள்ளது:*

- *ஒரு தைரியமான உறுதிக்கூற்று: அவளிடத்தில் இயேசு, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னில் விசுவாசிக் கிறவன் மரித்தாலும் பிழைப்பான்,*[12] *உயிரோடிருந்து என்னை*

விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான் ...''[13] என்று கூறினார் (வ. 25, 26). இது கர்த்தரால் கூறப்பட்ட மாபெரும் ''நான் இருக்கிறேன்'' கூற்றுகளில் இன்னொன்றாக உள்ளது. இயேசு தாம் உரிமைகோரியபடியாக தேவனுடைய தெய்வீக குமாரனாக இல்லாவிட்டால், இப்படிப்பட்ட கூற்றானது துடுக்குத்தனத்தின் உச்சமாக இருக்கும்.

- ஒரு விசுவாசிக்கும் உறுதிப்பாடு: அவரிடத்தில் அவள், ''... நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்'' என்று கூறினாள் (வ. 27). மார்த்தாளின் மும்மடங்கான அறிக்கையிடுதலானது இயேசு யார் என்பதைப் பற்றிய அவளது வியக்கத்தக்க உட்கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகிறது. இந்த அறிக்கையானது பிலிப்புச் செசரியாவின் திசைகளில் பேதுரு செய்திருந்த அறிக்கையுடன் ஒன்றாய் வைக்கப்படத் தகுதி வாய்ந்ததாக உள்ளது (மத். 16:16).

*மார்த்தாள் மற்றும் இயேசுவுடன் மரியாள் வந்து சேர்ந்துகொண்ட பின்பு, அவர்களும் புலம்புபவர்களின் கும்பல் ஒன்றும் சேர்ந்து, லாசரு வைக்கப்பட்டிருந்த கல்லறைக்குச் சென்றார்கள். கண்ணீர் சிந்தப் பட்டதைக் கிறிஸ்து கண்டபோது, "[அவர்] ஆவியிலே கலங்கித் துயர மடைந்[தார்]"[14] (யோவா. 11:33). பின்பு நம்மில் பலருக்கு நன்கு பழக்கமான வார்த்தைகள் வருகின்றன:[15] "இயேசு கண்ணீர் விட்டார்" (வ. 35). அருகில் நின்றிருந்தவர்கள், அவர் தமது நண்பர்களில் ஒருவரை இழந்துவிட்டதால் அழுதார் என்று நினைத்தார்கள் (வ. 36), ஆனால் அவ்வாறு இருக்கச் சாத்தியமில்லை; சற்று நேரத்தில், அவர் லாசருவுடன் மீண்டும் இணைவிக்கப்படுவார். அவர் தமக்கு அன்பான மரியாளும் மார்த்தாளும் அழுதுகொண்டிருந்ததால், அழுதார்; அவர் பரிவிரக்கத்தின் காரணமாகக் கண்ணீர் விட்டார்.[16] இன்றைய நாட்களில், நாம் அவரை இன்னும் "நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூ[டியவராக]'' கண்ணோக்க முடியும் (எபி. 4:15).*

*கிறிஸ்து, கல்லறையின் முன் வைக்கப்பட்டிருந்த கல்லை அகற்றச் செய்தார் (யோவா. 11:38, 39).[17] தேவனிடத்தில் ஜெபித்த பின்பு (வ. 41, 42), '' 'லாசருவே, வெளியே வா' என்று என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்" (வ. 43). மெக்கார்வீ அவர்கள், "அவர் லாசருவைப் பெயர் சொல்லி அழைத்தார், இல்லாவிட்டால் மரித்த யாவரும் எழுந்து வந்திருப் பார்கள் என்று மகிழ்வுடன் கூறப்பட்டுள்ளது" என்று எழுதினார்.[18] லாசரு, "... கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்ட[வராக]'' எழுந்து வந்தபோது (வ. 44), கும்பலில் இருந்தவர்களின் திகைப்பையும் மரியாள் மார்த்தாள் ஆகியோரின் மகிழ்ச்சியையும் உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?*

*குறிப்பிடத்தக்க இந்த நிகழ்ச்சியைக் கண்ணால் கண்டவர்களின் மத்தியில்,யோவான் "யூதர்கள்" என்று அடையாளப்படுத்திய தனிநபர்களும் இருந்தார்கள் (வ. 19, 31, 33). யோவான் தமது விவரத்தின் இந்தப் பகுதியில் இச்சொற்றொடரைச் சாதாரணமாக யூதத்தலைவர்களைக் குறிப்பதற்*

காகவே பயன்படுத்தினார், அதுவே இவ்விடத்திலும் விஷயமாக இருப்ப தாகக் காணப்படுகிறது.[19] இப்படிப்பட்ட தனிநபர்கள் மரியாள் மார்த்தாள் ஆகியோருடன் வருந்திக் கலங்குவதற்காகப் பெத்தானிக்கு வந்திருப்பார்கள் என்ற உண்மையானது, இந்தக் குடும்பமானது சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டிருந்த நிலையைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அது, லாசருவை எழுப்பிய நிகழ்ச்சியின் செயல்வலிவை இன்னும் கூடுதலாக்கியிருக்கும் (யோவா. 12:9-11).

"யூதர்கள்" என்பவர்கள் யாராக இருந்தாலும், நேர்மையான இருதயங் கொண்டு மற்றும் திகைப்பூட்டும் இந்த அற்புதத்தினால் விசுவாசிக்கும்படி நகர்த்தப்பட்டிருந்த சிலர் அங்கிருந்தார்கள் (11:45). அங்கிருந்த மற்றவர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்து, "இயேசு செய்தவைகளை" பரிசேயர்களுக்கு அறிவித்தார்கள் (வ. 46).

### சனதெரீன் சங்கத்தின் எண்ணப்போக்கு: நீக்கப்பட வேண்டிய போட்டி (வ. 47-54)

சனதெரீன் சங்கத்தின் விசேஷித்த கூட்டம் ஒன்றுகூட்டப்பட்டது (வ. 47).[20] சற்று முன்புதான் கிறிஸ்து, "மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள்" என்று கூறியிருந்தார் (லூக். 16:31). மரித்தோரிலிருந்து லாசரு எழுப்பப்பட்ட நிகழ்ச்சியானது கடின இருதயங் கொண்ட தலைவர்களில் விசுவாசத்தையல்ல ஆனால் மனத் திகிலையே உண்டாக்கியிருந்தது.

ஒரு அற்புதம் நடந்திருந்ததா இல்லையா என்பதையோ[21] அல்லது இயேசு தாம் உரிமைகோரினவாறே இருக்கின்றாரா என்பதையோ கண்டுபிடிப்பது என்பது சங்கத்தாரின் அக்கறையாக இருக்கவில்லை. அவர்கள் தங்களின் வேலைகள் மற்றும் கௌரவமான நிலை ஆகியவை பற்றியே அக்கறை கொண்டிருந்தார்கள் (வ. 48ஐக் காணவும்): இயேசு தடுத்து நிறுத்தப்படவில்லையென்றால், விரைவில் நாடு முழுவதும் அமளி ஏற்படும். இது நாட்டின்மீது ரோமர்கள் தங்கள் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்க காரணமாகக் கூடும் - மற்றும், (பயங்கரங்களில் எல்லாம் பயங்கரமான) அது நடந்ததென்றால், அவர்கள், தங்கள் அதிகாரப் பதவிகளை இழக்கக் கூடும்.

அவர்கள் தங்கள் பிரச்சனைக்கு ஒரே ஒரு தீர்வை மட்டுமே கண்டனர்: இயேசு மரிக்க வேண்டும். பிரதான ஆசாரியரான காய்பா,[22] "ஜனங் களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்" என்று சங்கத்தாரிடம் கூறினார் (வ. 50).

காய்பா அவர்களுக்காக நோக்கம் கொண்டபடியே, இந்த வார்த்தை கள், ரோமர் ஆளுகையின்கீழ் யூதர்களின் சலுகையான வகுப்பாருக்காக இயேசு மரணம் அடைய வேண்டும் என்று அர்த்தப்படுத்தின. இருப்பினும், காய்பாவின் பிரதான ஆசாரியத்துவப் பதவியின் காரணமாக, அவரது வெறுப்பு மனப்பான்மையைத் தேவன், முற்றிலும் மாறுபட்ட ஒன்றிற்காகக் குரல் கொடுக்கும்படி பயன்படுத்தினார் என்று யோவான் கருத்தாகக் கண்ணோக்கினார். "இஸ்ரவேல் மக்களுக்காகவும் மற்றும்

*புறஜாதியார் யாவருக்காகவும், கிறிஸ்துவின் மாற்றீடான மரணத்தைப் பிரதான ஆசாரியர் தாம் அறியாமலேயே முன்னுரைத்தார் ... .'*"[23]

"அந்நாள் முதல் அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்" (வ. 53; 11:57 ஐயும் காணவும்). சற்றுக் காலத்திற்கு [முன்] மனிதர்கள் இயேசுவைக் கொலை செய்ய விரும்பியிருந்தனர் (யோவா. 5:18; 7:1ஐக் காணவும்), ஆனால் இது மாறுபட்டதாக இருந்தது. முந்திய தாக்குதல்கள் அங்குமிங்குமானவையாக இருந்தன; இவ்வேளையில் கிறிஸ்துவின் விரோதிகள், அவர் மரணம் அடையும் வரை ஓயமாட்டார்கள். இயேசுவுக்கு மரண தண்டனை அளிப்பதற்கான முந்திய முயற்சிகள் தனிப்பட்டவையாகவும் அலுவலக ரீதியற்றவைகளாகவும் இருந்தன; இது முதல், முயற்சிகள் யாவும் சங்கத் தலைவர்களின் சார்பானவைகளாக இருக்கும்.

இருப்பினும், மிகமுக்கியமான வேறுபாடு ஏற்கனவே உறுதியாயிருக்கவில்லை. முன்பு, கிறிஸ்துவை அழிக்க முயற்சிப்பதில் *பரிசேயர்கள்* தலைமையேற்றிருந்தார்கள் (மாற். 3:6), ஆனால் சனதெரீன் சங்கத்தில் சதுசேயர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள்.[24] சதுசேயர்கள் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கவில்லை (மத். 22:23), இவ்விதமாக, லாசரு உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற அறிக்கையினால் இவர்கள் விசேஷமாகத் தொல்லைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இப்போது முதல் *சதுசேயர்களே*, இயேசுவின் மரணத்திற்குத் திட்டம் தீட்டுவதில் தலைமை வகிப்பவர்களாய் இருப்பார்கள். இவர்கள், பரிசேயர்களால் செய்ய முடியாதிருந்ததைச் செய்வதற்கு அரசியல் ரீதியான தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

மீண்டும் ஒருமுறை இயேசு, எருசலேமின் அருகாமையிலிருந்து பின்வாங்கினார். அவரும் அவரது சீஷர்களும் யூதேயாவின் வனாந்தரத்திற்கு அருகில் இருந்த எப்பிராயீமுக்குத் திரும்பினார்கள் (வ. 54). இந்தச் சிறு நகரமானது யூதேயாவின் வடகிழக்கில், யோர்தான் சமவெளிக்குக் கீழ்நோக்கி வழிநடத்திய கரடுமுரடான பகுதிக்கு அடுத்திருந்தது என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர்.[25]

## ஆசீர்வாதங்களை நோக்கி உங்கள் எண்ணப்போக்குகளைச் சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள் (லூக். 17:11-19; யோவா. 11:55)

எப்பிராயீமில் இயேசு எவ்வளவு காலம் தங்கியிருந்தார் என்று நாம் அறிவதில்லை. [அங்கிருந்த] ஒருவேளையில் அவரும் அவரது அப்போஸ்தலர்களும் வடக்கில் தொலைவாகப் பயணம் செய்தனர். லூக்கா சுவிசேஷ விவரத்தின்படி, "அவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில், அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்து போனார்"[26] (17:11ஆ). ஒருவேளை அவர் சமாரியாவிலும் கலிலேயாவிலும் இருந்த தமது சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர்களை மீண்டும் பார்வையிட்டு இருக்கலாம்.

## *எருசலேமுக்கு இயேசுவின் பயணம் தொடங்கிற்று (லூக். 17:11அ; யோவா. 11:55)*

*கடைசியாக, பஸ்கா பண்டிகைக்கான காலம் சமீபித்திருந்தது, திருப்பயணிகள் எருசலேமை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள் (யோவா. 11:55). கிறிஸ்துவும் பன்னிருவரும்[27], யோர்தான் நதியின் கிழக்கு கரையின் ஓரமாக சென்றுகொண்டிருந்த பயணிகளின் குழு ஒன்றில் சேர்ந்து கொண்டிருக்கலாம். அவர் பயணம் செய்கையில், குறைந்தபட்சமாக ஒரு கும்பலினால் சூழப்பட்டிருந்தார். பண்டிகைக்கான இந்தப் பயணத்தில், "அவரது சகோதரர்கள் கருத்துத் தெரிவித்திருந்தபடி [யோவா. 7:1-6], அவர் தமது திரளான கூட்டம் பின்தொடர, ஒரு அரசர் என்ற வகையில் செல்லுவார்."[28] இந்தப் பாடத்தின் எஞ்சிய பகுதியும், அடுத்து வரும் இரண்டு பாடங்களும், எருசலேமுக்கு இயேசு சென்ற அவரது கடைசிப் பயணத்தில் அவரது போதனைகளையும் செயல்களையும் கூறுபவைகளாய் இருக்கும் (லூக். 17:11அ).*

## *எருசலேமுக்கு இயேசுவின் பயணம் இடைமறிக்கப்பட்டது (லூக். 17:11-19)*

*இந்தப் பயணத்தில் நடந்ததாகப் பதிவு செய்யப்பட்ட முதல் நிகழ்ச்சியானது கலிலேயா சமாரியா நாடுகளின் எல்லையிலிருந்து குறுக்கேயிருந்த பெரேயாவின் வடக்குப் பகுதியில் நடந்தது என்பது தெளிவு (வ. 11).[29] குறிப்பிட்ட ஒரு கிராமத்தில், இயேசு பத்து தொழுநோயாளர்களை எதிர் கொண்டார் (வ. 12, 13). அவர்களில் ஒருவர் சமாரியராயிருந்தார் (வ. 16); மற்றவர்கள் அநேகமாக யூதர்களாய் இருந்திருப்பார்கள். குணப்படுத்த முடியாத ஒரு நோயானது இனப்பாகுபாட்டின் சுவர்களைத் தகர்த்து இருந்தது (யோவா. 4:9).*

*இந்தப் பத்து மனிதர்களையும் இயேசு குணமாக்கிய பின்பு (வ. 14), சமாரியராயிருந்த மனிதர் மட்டுமே தமது நன்றியை வெளிப்படுத்தத் திரும்பி வந்தார் (வ. 15, 16). தமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களுக்கு நன்றி கூறவும் தேவனுக்கு மகிமை செலுத்தவும் தவறுகின்ற எவரொருவரையும், கர்த்தரின் பதிலானது குற்றப்படுத்துகிறது: "சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே?" (வ. 17). நம் எல்லாருக்கும் "ஸ்தோத்திரம் செலுத்தும்" எண்ணப்போக்கு அவசியம் என்று பவுல் கூறினார் (கொலோ. 4:2). மற்றவர்கள் "நன்றியுடைமையுள்ள எண்ணப் போக்கு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளனர்.*

# தேவனுடைய வாக்குத்தத்தங்களை நோக்கி உங்கள் எண்ணப்போக்கைச் சீரமைத்துக் கொள்ளுங்கள் (லூக். 17:20-37)

**தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றை விசுவாசியுங்கள் (வ. 20, 21)**

*இயேசுவை எப்போதும் விமர்சித்துக் கொண்டிருந்த பரிசேயர்களும் கூட்டத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவரிடம் அவர்கள், "தேவனுடைய ராஜ்யம் எப்போது வரும்?" என்று கேட்டார்கள் (வ. 20அ). இது அநேகமாக, அவரது மதிப்பைக் குலையச் செய்யவேண்டும் என்ற அவர்களின் தொடர்ந்த நோக்கத்தில், ஏளனமாகக் கேட்கப்பட்டிருக்கலாம் (லூக். 11:54).[30] அவர்கள் இயேசுவைப் பின்வருவது போன்ற வார்த்தைகளால் பரிகசித்துக் கொண்டிருந்ததைக் கற்பனை செய்தல் கடினமாக இருப்பதில்லை: "நீர் உமது ஊழியத்தைத் தொடங்கியபோது, ராஜ்யம் 'சமீபித்திருக்கிறது' என்று கூறினீர் [மத். 3:2]. ஆனால் மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன, அதற்கான [ராஜ்யத்திற்கான] அடையாளத்தைக் காணவில்லை. எனவே, அது எப்போதுதான் தோன்றப் போகிறது?" யூதர்களின் எஞ்சியவர்கள் போலவே, இவர்களும் ஆடம்பரமாக ஆர்ப்பாட்டமாக வரக்கூடியதான உலகப்பிரகாரமான ராஜ்யத்தையே தங்கள் சிந்தையில் கொண்டிருந்தனர்.*

*குறிப்பிடத்தக்க பொறுமையைக் காட்சிப்படுத்திய கிறிஸ்து, தமது ராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பை மீண்டுமாக எடுத்துரைத்தார். முதலில் அவர், "தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது" என்று கூறினார் (லூக். 17:20ஆ). யூதர்கள், உள்ளான மனமாற்றத்திற்குப் பதிலாக வெளிப்படையான அடையாளங்களை எதிர்பார்த்திருந்தனர். இயேசுவின் வார்த்தைகள் இன்றைக்கும் நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளன. "தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது" என்று இயேசு உறுதிப்படுத்தியதின்மூலம், "தீர்க்கதரிசனங்களைத் தற்கால நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டு, அவர் திரும்ப வருதலின் காலத்தை முன் கூட்டியே முன்னுரைக்கும் எல்லா முயற்சிக்கும் முடிவைக் கொண்டு வந்தார்."[31]*

*பின்பு கர்த்தர், "இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்று கூறினார் (வ. 21ஆ). "உங்களுக்குள்" [இது ஆங்கிலத்தில்* "in your midst" *என்றுள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது [தமிழில் உள்ளதுபோல்] "உங்களுக்குள்" என்று அர்த்தப்படக்கூடும் (KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் இவ்வாறே உள்ளது). அது இவ்விடத்தில் அர்த்தம் என்றால், ராஜ்யம் (தேவனுடைய ஆளுகை) என்பது புறம்பானதல்ல, ஆனால் உள்ளானது என்று இயேசு கூறினார். இருப்பினும், இந்த வார்த்தைகள் பரிசேயர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுமானால், "உங்களுக்குள்ளே" என்பது மிகவும் பொருத்தமானதாய் இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்குப் பின் பல வாரங்கள் வரை ராஜ்யம்/சபை உண்மையில் நிலைநாட்டப்பட்டிருக்காது, என்றாலும்*

*கூட,[32] விரைவிலேயே முடிசூடப்படப் போகின்ற ராஜா ஏற்கனவே* "in their midst" *[அவர்கள் மத்தியில்] இருந்தார்.*

**தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றிற்கு ஆயத்தமாகுங்கள் *(வ. 22-37)***

*கிறிஸ்து தமது கவனத்தை தமது விரோதிகளிடமிருந்து, தமது சீஷர்களிடமாகத் திருப்பி, தமது இரண்டாவது வருகையைப் பற்றிப் பேசலானார். ஒருவேளை, பரிசேயர்களின் நம்பிக்கையின்மையானது, அவிசுவாசிகள் யாவரும் தண்டிக்கப்படும் அந்த நாளை அவருக்கு நினைவூட்டியிருக்கலாம். ஒருவேளை, பரிசேயர்களின் தொடர்ந்த நச்சரிப்பானது, அவரைத் தமது பின்பற்றாளர்கள் சகித்துக் கொள்ள வேண்டியிருந்த உபத்திரவத்தைப் பற்றி நினைக்கச் செய்து, கடைசியில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்று அவர்களுக்கு உறுதியளிக்கத் தூண்டியிருக்கலாம். பேசிய விஷயங்களின் மாற்றத்திற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், காலங்களின் முடிவில் தமது மறுவருகையைப் பற்றிய விரிவான உரைக்கு அவர் கடந்து சென்றார். மற்ற விஷயங்களின் மத்தியில், அவர் தமது அப்போஸ்தலர்களுக்குப் பின்வருபவற்றைக் கூறினார்:*

- *அவருடைய வருகையானது, காணக்கூடியதாக இருக்கும். அவரது மறுவருகைக்காக அவர்கள் ஏங்கி இருக்கையில் (வ. 22), அவர் இரகசியமாக திரும்பியிருந்தார் என்ற உரிமைகோருதல்களினால் அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டுவிடக் கூடாது; ஏனெனில் அவர் வருகின்றபோது எல்லாரும் அதை அறிந்து கொள்வார்கள் (வ. 27-30).*
- *அவருடைய வருகையானது எதிர்பாராததாக இருக்கும் (வ. 27-30). இவ்விதமாக அது, ஆயத்தம் இல்லாது இருக்கும் அநேகரைப் பிடிக்கும் (வ. 34-36).*

*இந்த வேளையில் கிறிஸ்துவின் உரையானது பிந்திய போதனையை முன் எதிர்பார்த்தது. இது, அவரது இரண்டாவது வருகையையும் எருசலேமின் அழிவையும் பற்றிக் கலந்துரையாடிய மத்தேயு 24வது[33] அத்தியாயத்தைப் போன்றதாக உள்ளது (மத். 24:1-3ஐக் காணவும்). மத்தேயு 24ல் இவ்விரு நிகழ்ச்சிகள் பற்றிய போதனைகள் ஒன்றின்மீது மற்றொன்று கவிந்துள்ளதாகக் காணப்படுகிறது.[34] அதேபோன்று, லூக்கா 17:22-37ன் மொழிநடையானது இரண்டாம் வருகையின் ஒரு மாதிரியான எருசலேமின் அழிவை முன் எதிர்பார்ப்பதாக இருக்கலாம்.[35]*

*இந்த உரையில், ஒரு திறவுகோல் கூற்றானது வசனம் 25ல் காணப்படுகிறது: "அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது." தொலைதூர எதிர்காலத்தில் உணர்வெழுச்சிமிக்க நாட்கள் இருப்பினும், முதலில் தாம் மரிக்க வேண்டியிருந்தது என்ற உண்மையைப் பற்றிய கண்ணோட்டத்தைத் தமது சீஷர்கள் இழந்துபோவதை இயேசு விரும்பவில்லை.*

# ஜெபத்தை நோக்கி உங்கள் எண்ணப்போக்கை சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள் (லூக். 18:1-14)

*கிறிஸ்துவுக்கும் (லூக். 17:25) அவரது பின்பற்றாளர்களுக்கும் (18:7) கடினமான காலங்கள் எதிர் வந்துகொண்டிருந்தன - தேவனுடன் நெருங்கியிருப்பதினால் மட்டுமே அந்தக் காலங்களைச் சகித்துக் கொள்ள முடியும். இயேசு ஜெபத்தின் பாடக்கருத்திற்குத் திரும்பினார்.*

**தேவன்மீது நம்பிக்கையாயிருங்கள் (வ. 1-8)**

முதலில், "சோர்ந்து போகாமல், எப்போதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (வ. 1). அவர், "தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனு மாயிருந்தும்" கூட (வ. 2), ஒரு விதவையின் விடாமுயற்சியின் (வ. 3-5) காரணமாக, அவளது வேண்டுகோளை நிறைவேற்றிய ஒரு நியாயாதி பதியைப் பற்றிக் கூறினார்.[36] இருதயக் கடினம் கொண்ட ஒரு நியாயாதிபதி இவ்விதமாய்த் தூண்டப்படக் கூடுமென்றால், அன்பார்ந்த ஒரு பிதா தமது பிள்ளைகளின் வேண்டுகோள்களுக்கு எவ்வளவு அதிகமாய்ப் பதில் அளிப்பார் என்பதே இதன் பொதுப் பயன்பாடாக உள்ளது! கிறிஸ்து தமது சீஷர்களுக்கு ஏற்படுத்த வேண்டிய ஒரு விசேஷக் கருத்தையும் இதில் கையாண்டிருந்தார்: அவர்கள் கொடுமைப்படுத்தப் படும்போது, மனம் உடைந்து போவதற்குப் பதிலாக, அவர்கள் தேவன்மீது நம்பிக்கை கொள்ளவேண்டும், ஏனெனில் அவர் கடைசியில் நீதி செய்வார் (வ. 7, 8).[37]

இயேசு, தமது பின்பற்றாளர்கள் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கும் அடக்குமுறையை அறிந்தவராக, "... மனுஷ குமாரன் வரும்போது, பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" என்று உரக்க வியப்புற்று கூறினார் (வ. 8ஆ). இது சந்தர்ப்பப் பொருளில், "காலங்கள் கடினமாகும்போது கூட, தொடர்ந்து ஜெபிக்கும் வகையிலான விசுவாசத்தை அவர் காண்பாரோ?" என்று அர்த்தப்படுகிறது.[38]

**உங்கள்மீது நம்பிக்கை வைக்காதீர்கள் (வ. 9-14)**

ஜெபித்தல் மட்டுமே போதுமானதாக இருப்பதில்லை; நாம் ஜெபிக்கும் போது, சரியான எண்ணப்போக்கையும் கொண்டிருக்க வேண்டும். ஆகவே கிறிஸ்து, "தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமா யெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (வ. 9). இது பரிசேயர்களைப் பற்றிய ஒரு விளக்கமான விவரிப்பாக இருந்தது, ஆனால் கர்த்தர், சுயநீதியான அந்தத் தலைவர்களினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்த மற்றவர்களைக் குறித்தே அதிக அக்கறை கொண்டு இருந்திருக்கலாம் (லூக். 12:1).[39]

நன்கு பழக்கமான இந்த உவமையானது, ஜெபவேளையொன்றை "சுயபாராட்டுதலில் தன் நெஞ்சோடு பேசிய நிகழ்ச்சியாக" மாற்றிய பகட்டான பரிசேயனைப் பற்றிக் கூறுகிறது[40] (வ. 11, 12). அவன், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (வ. 13) என்று மட்டும் கூறிய ஒரு

*ஆயக்காரனுடன் (வரிவசூலிப்பவனுடன்) எதிர்மறையாக ஒப்பிடப் பட்டான். இந்தக் கதையை இயேசு, "அவனல்ல, இவனே நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப் படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' என்று கூறி முடித்தார் (வ. 14).[41] நாம் ஜெபிக்கும்போது, நாம் தாழ்மையின் எண்ணப் போக்கைக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.*

## *முடிவுரை*

*இது எண்ணப்போக்கைப் பரிசீலனை செய்யும் வேளையாக உள்ளது. கொரிந்தியர்களுக்குப் பவுல், "நீங்கள் ... என்று உங்களைச் சோதித்தறியும் படி இப்படி எழுதினேன்'' (2 கொரி. 2:9ஆ) என்று கூறினார். நீங்கள் ஏற்கனவே, தகுதியான ஒரு எண்ணப்போக்கைப் பராமரிப்பதற்கான உங்கள் போராட்டத்தை அறிந்திருக்கலாம்; இது எனது விடாப்பிடியான போராட்டங்களில் ஒன்றாக உள்ளது. இதற்கு மறுபுறுத்தில், நீங்கள் உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஒரு நண்பரிடத்தில், நீங்கள் எப்போதாவது "*B.A.*" வை (*Bad Attitude *அதாவது, மோசமான எண்ணப்போக்கை) காட்சிப்படுத்திய தாக அவர் நினைக்கின்றாரா என்று கேட்பது அவசியமாயிருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் இருதயத்தையும் உங்கள் எண்ணப் போக்குகளையும் பரிசீலனை செய்யும்படி தேவனிடத்தில் கேளுங்கள் (சங். 26:2; எரே. 12:3).*

*நாம் ஒவ்வொருவரும் தத்தமது எண்ணப்போக்கை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ள முடியும்? அநேகமாக இதற்கு பிலிப்பியர் 4:8ல் மிகச் சிறந்த பதில் காணப்படலாம்: "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ள வைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவை களெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவை களோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்."* KJV *மற்றும் தமிழில் ''அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்'' என்றுள்ளது.* [NASB *வேதாகமத்தில்* "dwell on these things" *அதாவது, ''அவைகளிலேயே தரித்திருங்கள்'' என்றுள்ளது.*] *நேர்மறையான மற்றும் நல்ல எண்ணப்போக்குகளை நமது சிந்தைகளில் நிரப்புதல் என்பதே, மோசமான எண்ணப்போக்குகளை அழிப்பதற்கான மிகச் சிறந்த வழியாக உள்ளது.*

*கர்த்தரின் எண்ணப்போக்கை [நமக்குள்] வளர்த்துக்கொள்ளுதல் என்பதே அறைகூவலாக உள்ளது. பவுல், ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று எழுதினார் (பிலி. 2:5) அந்த இலட்சிய நிலையை நாம் ஒருக்காலும் முழுமையாக அடைய முடியாது; ஆனால் அதற்கு நாம் எவ்வளவு நெருங்கி வருகின்றோமோ, அவ்வளவு அதிகமாக நாம் மனசமாதானத்தைக் கொண்டிருப்போம், மற்றும் நாம் பிறருக்கு மாபெரும் ஆசீர்வாதமாக இருப்போம்.*

குறிப்புகள்

[1]"நாட்டுப்புற மற்றும் மேற்கத்திய" இசையை அறிந்த மக்கள் உள்ள இடத்தில் நீங்கள் வசிக்க நேர்ந்தால், நீங்கள் "எண்ணப்போக்கை அனுசரித்தல்கள்" பற்றிப் பேசுகிற "நாட்டுப்புற மற்றும் மேற்கத்திய" நகைச்சுவைப் பாடலைப் பற்றிக் குறிப்பிடலாம். [2]லூக்கா சுவிசேஷத்தின் இந்தப் பகுதிக்குப் பொதுவாக உண்மையாயிருக்கிறது போலவே, இந்தப் பாடத்தின் பெரும்பாலான பகுதியானது, நாம் முன்பே கலந்துரையாடியுள்ள இயேசுவின் முந்திய போதனைகளை எதிரொலிக்கிறது. எடுத்துக்காட்டாக, லூக். 17:1ஐ மத். 18:7, 10உடன் ஒப்பிடவும், மற்றும் லூக். 17:2ஐ மத். 18:6உடன் ஒப்பிடவும். [3]இந்தப் புத்தகத்தில் உள்ள இடமானது, இந்த எடுத்துரைப்பில் உள்ள வேத வசனங்கள்மீது, வரையறைக்கு உட்பட்ட நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்த மட்டுமே என்னை அனுமதிக்கிறது. பாடத்திலும் அடிக்குறிப்புகளிலும் ஒரு சில கருத்துக்கள் காணப்படும். நீங்கள் போதிக்கும்போது, இந்த சிந்தனைகளை விரிவாக்கி கூடுதல் நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்த விரும்பலாம். [4]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 517. [5]இதை மத்தேயு 18:21-35ல் உள்ள போதனையுடன் ஒப்பிடவும். சிலர், எவரொருவரும் "மனந்திரும்பாத" வரையிலும் (அதாவது மன்னிப்புக் கேட்காத வரையிலும்), நாம் அவரை மன்னிப்பதற்குக் கடமைப்பட்டிருப்பதில்லை என்று போதிப்பதற்கு லூக்கா 17:3, 4ஐப் பயன்படுத்துகின்றார்கள், ஆனால் இவ்வேத வசனப் பகுதியானது உண்மையில் அதைக் கூறுவதில்லை. இது, அவர் மனந்திரும்பினால், நாம் அவரை மன்னிக்க வேண்டும் என்று கூறுகிறது - ஆனால் அவர் மனந்திரும்பும் வரையிலும் காத்திருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதில்லை. மத்தேயு 18:21-35 வசனப்பகுதியானது அவ்விதமான கட்டுப்பாடு எதையும் கொடுப்பதில்லை. [6]சந்திப்பதற்குக் கடினமாக உள்ள பல அறைகூவல்களைக் கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளார். நாம் யாவருமே "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும்" என்று கதற வேண்டும். [7]இங்கு குறிப்பிடப்பட்ட காட்டத்திமரம் என்பது ஆழமாக வேரூன்றி, பிடுங்கியெடுக்கக் கடினமாயிருப்பதற்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. லூக்கா 17:6ஐ மத்தேயு 17:20உடன் ஒப்பிடவும். மத்தேயு 17:20ஐப் பற்றிய கலந்துரையாடல் ஒன்றுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும். [8]இதற்கு முன்பு நாம், லூக்கா 10:38-42ல் மரியாளையும் மார்த்தாளையும் சந்தித்தோம். யோவான் 11:2 வசனம் பிந்திய ஒரு நிகழ்ச்சியினால் மரியாளை அடையாளப்படுத்துகிறது (யோவா. 12:3ஐக் காணவும்). [9]நான்கு நாட்கள் என்பது (வ. 17) நான்கு முழு நாட்களா அல்லது இரண்டு நாட்கள் தாமதித்தல் என்பது (வ. 6) இரண்டு முழு நாட்களா என்பதை நாம் அறியாமல் இருக்கின்றபடியால், நாம் இதைப் பற்றிக் கோட்பாடு ரீதியாக வலியுறுத்துபவர்களாய் இருக்க முடியாது; ஆனால், லாசரு மரிக்குமுன்பு இயேசு பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்திருக்கச் சாத்தியமில்லை. இவைகள் முழு நாட்களாக இருந்தால், மற்றும் இயேசு பெத்தானியாவில் இருந்து ஒருநாள் பிரயாண தூரத்தில் இருந்திருந்தால், செய்தியாளர்கள் புறப்பட்டுச் சென்றபின்பு விரைவிலேயே லாசரு மரித்தார். இயேசு இரண்டு நாட்கள் பயண தூரத்தில் இருந்திருந்தால், செய்தியாளர்கள் இயேசுவை வந்தடைந்த அவ்வேளையிலேயே லாசரு மரித்துவிட்டார். இயேசு மூன்று நாள் பிரயாண தூரத்தில் இருந்திருந்தால், அவர் செய்தியைப் பெற்ற உடன் பயணத்தைத் தொடங்கியிருந்தாலும், அவர் பெத்தானியாவுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த வேளையிலேயே லாசரு மரித்திருப்பார். [10]Edmund P. Clowney, Jr., *The Life of Christ* (Grove City, Pa.: Visuals, 1953), 31. இது யோவானின் ஏழாவது "அடையாளமாக" இருந்தது ("கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும்).

*[11]இங்கு பேசியவர், "இரட்டையர்" என்ற அர்த்தம் கொண்ட "திதிமு" என்றும் அறியப்பட்டிருந்த தோமா என்பவராக இருந்தார். அவர் அநேகமாக இரட்டைச் சகோதரர் ஒருவரைக் கொண்டிருந்து இருக்கலாம். [12]வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், "அவன் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவான்." [13]வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ''அவன் ஆவிக்குரிய வகையில் மரிக்க மாட்டான், கடைசியில் அவன் நித்திய வாழ்வை மகிழ்வுடன் அனுபவிப்பான்." [14]''கலங்கித் துயரமடைந்து'' என்ற மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் சுவிசேஷ விவரங்களில் பெரும்பாலும் இயேசுவின் கோபத்தைக் குறிப்பதற்கு எதிர்மறையான வழிமுறையில் பயன்படுத்தப்படுகின்றன. பழக்க வழக்கத்தினால் வற்புறுத்தப்பட்டிருந்த அதிகப்படியான அழுகையை அவர் விரும்பவில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரணத்தையும் மனவேதனைகளையும் அவர் அனுபவித்துக் கொண்டிருந்த வகையிலான மனவேதனைகளை - விளைவித்த பாவம் இவ்வுலகில் வந்திருந்தது தொடர்பாக அவர் கோபம் கொண்டிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது (ஆதி. 3:3; ரோமர் 5:12 ஆகிய வசனங்களைக் காணவும்). இருப்பினும் இவ்வார்த்தைகள், அவர் தமது நண்பர்கள் கலங்கியிருந்ததால் தாமும் கலங்கியிருந்தார் என்று மட்டும் அர்த்தப்படவும் முடியும். [15]யோவான் 11:35 வசனமானது (ஆங்கில வேதாகமத்தில்) மிகவும் சிறிய வசனமாக உள்ளது. [தமிழ் வேதாகமத்தில் இது இரண்டாவது சிறிய வசனம் என்று கூறப்படலாம். மிகவும் சிறியதாக உள்ள முதல் வசனம், யோபு 36:1 ஆகும்.] யோவான் 11:35ன் சுருக்கத்தன்மையினால், இது பிள்ளைகளினால் மனப்பாடம் செய்யக்கூடிய முதல் வசனங்களில் ஒன்றாகப் பெரும்பாலும் உள்ளது. [16]கிறிஸ்து லாசருவை, மரித்த நீதிமான்களின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையிலிருந்து (லூக். 16:23) வருத்தமும் பாவமும் நிறைந்த இவ்வுலகிற்கு மீண்டும் கொண்டு வந்து கொண்டிருந்தார் என்பது இயேசுவின் வருத்தத்திற்கு ஒரு காரணியாக இருந்தது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. லாசரு பிற்பாடு மீண்டுமாக மரணத்தின் வேதனையை அனுபவிக்க வேண்டியிருந்தது. [17]இவ்வசனங்கள் நமக்கு, அன்றைய நாட்களில் இருந்த கல்லறைகள் பற்றிய விவரங்களைத் தருகின்றன.* [18]McGarvey and Pendleton, 526. *[19]"கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும். "யூதர்கள்" என்ற சொற்றொடரானது, யோவான் 11ன் முதல் பகுதியிலும் (வ. 8ல்) முடிவுப் பகுதியிலும் (வ. 55ல்) கூறப்பட்ட யூதத்துவத் தலைவர்களைக் குறிப்பிடுகிறது. அந்த அத்தியாயத்தின் இடைப்பகுதியிலும் அவ்வாறே குறிப்பிடப்படுகிறது என்பதும் ஏற்புடையதாகவே உள்ளது. வசனம் 46ல் "யூதர்களின்" ஒரு குழுவானது (வ. 45) பரிசேயர்களிடம் அறிக்கை செய்தார்கள் என்பது ஒரு அடிப்படையான மறுப்பாக உள்ளது - ஆனால் அவர்கள் தங்கள் சக தலைவர்களிடத்தில் அறிக்கை செய்திருக்க முடிந்திருக்கும். [20]வசனம் 47ல் "ஆலோசனைச் சங்கம்" என்பது சனதெரீன் சங்கமாக உள்ளது. சனதெரீன் சங்கம் பற்றிய சுருக்கமான குறிப்புகளை "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும்.*

*[21]மரித்தோரை உயிரோடு எழுப்பியது உட்பட அற்புதங்களை இயேசு நிகழ்த்தியிருந்ததை அவர்கள் மறுக்கவில்லை (வ. 47). [22]காய்பா "அந்த வருஷத்துப்" பிரதான ஆசாரியராக இருந்தார் என்று வசனம் 49 கூறுகிறது. இது ''அந்த வருஷத்திற்கு மட்டும்" என்று அர்த்தப்படுவதில்லை, ஏனெனில் அவர் அந்தப் பணிப்பொறுப்பில் கி.பி. 18-36 ஆண்டுகளில் சேவை செய்திருந்தார், ஆனால் இது ''அந்தக் குறிப்பிட்ட வருஷத்தில்'' என்று (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இயேசு மரித்த வருஷத்தில் என்று) அர்த்தப்படுகிறது.* [23]Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* (Chicago: Moody Press, 1978), 161. *[24]யோவான் 11:47, 57ல் குறிப்பிடப்பட்டவர்களில்*

*பெரும்பாலான "பிரதான ஆசாரியர்கள்" சதுசேயர்களாக இருந்தார்கள்.* [25]*இந்த புத்தகத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும்.* [26]*இது, "அவர் சமாரியா மற்றும் கலிலேயா நாடுகளின் நடுவாகக் கடந்து சென்றார்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். இது, இயேசு உண்மையிலேயே சமாரியா மற்றும் கலிலேயாவினூடாகக் கடந்து சென்றார் என்பதை அர்த்தப் படுத்தியதா அல்லது அவர் (ஒருவேளை பெரேயாவிலிருந்து) இவ்விரு பகுதிகளின் எல்லையை மட்டும் சென்றடைந்தார் என்பதை அர்த்தப்படுத்தியதா என்பதைக் குறித்துக் கல்வியாளர்கள் நிச்சயமான கருத்துக் கொண்டிருப்பதில்லை.* [27]*கலிலேயாவில் அவருக்கு ஊழியம் செய்திருந்த பெண்களில் சிலரும் கூட்டத்தில் பயணப்பட்டு வந்திருக்கலாம் (மத். 27:55; மாற். 15:41ஐக் காணவும்).* [28]Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 196. [29]*இந்தப் பொதுவான இட அமைப்பை இந்தப் புத்தகத்தில் உள்ள வரை படத்தில் காணவும்.* [30]*பயணம் தொடருகையில் கட்டியெழுப்பப்பட்ட எதிர்பார்ப்பின் காற்றில் பிடிபட்டிருந்த அவர்களின் கேள்வியானது நேர்மையானதாக இருக்கச் சாத்தியமுண்டு - ஆனால் இவ்வாறு நடந்திருக்க வாய்ப்பில்லை.*

[31]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 227. [32]*சபையானது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலைநாட்டப்பட்டது (அப். 2).* [33]*பின்வரும் வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்:*

| | |
|---|---|
| *லூக். 17:24 / மத். 24:27* | *லூக். 17:26, 27 / மத். 24:37-39* |
| *லூக். 17:31 / மத். 24:17* | *லூக். 17:35 / மத். 24:41* |
| *லூக். 17:37 / மத். 24:28* | |

*லூக்கா 17ல் உள்ள தனிச் சிறப்பான சில பாடக் கருத்துக்கள் மத்தேயு 24ல் காணப்படுவதில்லை, எடுத்துக்காட்டாக, லூக்கா 17ல் இயேசு தமது உரையைக் கேட்டவர்கள் தமது வருகைக்குத் தயாராயிருக்கும்படி எச்சரிப்பதற்கு சோதோம் கொமோராவின் அழிவைப் பயன்படுத்தினார். "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" (லூக். 17:32) என்ற புத்திமதியானது இவ்விடத்தில் மட்டுமே காணப்படுகிறது, இது "உங்கள் வாழ்வின் பழைய முறைமைகளைத் திரும்பிப் பாராதீர்கள்!" என்று போதிப்பதற்கான வல்லமை நிறைந்த வழிமுறையாக உள்ளது (லூக். 9:62ஐக்காணவும்).* [34]*"மற்றும் அவர் புறப்பட்டுச் சென்றார்" என்ற தலைப்பில் இப்புத்தகத்தில் இனி வரவிருக்கும் இரு பகுதிப் பாடங்களில் மத்தேயு 24ன் மீதான கலந்துரையாடலைக் காணவும்.* [35]*நான் விசேஷமாக வசனம் 31ஐயும் 37ஐயும் சிந்தையில் கொண்டுள்ளேன். இவைகள் கருத்தாக்கமான வகையில் இரண்டாம் வருகைக்கு நடைமுறைப் படுத்தப்பட முடியும், ஆனால் மத்தேயு 24ல் உள்ள இதே போன்ற மொழிநடைகள் எருசலேமின் அழிவைப் பற்றிப் பேசுவதாகக் காணப்படுகிறது. இந்தப் பாடத் தொடரில் பிற்பாடு வரவிருக்கும் மத்தேயு 24ன் மீதான கலந்துரையாடலைக் காணவும்.* [36]*இது, சிலவேளைகளில் ''நச்சரித்த விதவையின் உவமை'' என்று அழைக்கப்படுகிறது. ''நச்சரித்தல்'' என்றால் "பிடிவாதமான விடாமுயற்சி" என்று அர்த்தப்படுகிறது.* [37]*லூக்கா 18:7ஐ வெளி. 6:9-11உடன் ஒப்பிடவும்.* [38]The Living Bible *பொழிப்புரையில், "விசுவாசம் கொண்டு ஜெபிப்பவர்கள்" என்றுள்ளது. இதேபோன்ற ஒரு அக்கறையானது மத்தேயு 24:12, 13ல் விளக்கப்படுகிறது.* [39]*இயேசுவின் போதனையானது பரிசேயர்களின் எண்ணப்போக்குகளை மாற்றியிருக்கச் சாத்தியக்கூறு இல்லை, ஆனால் பரிசேயர்களைப் பாராட்டியவர்களின் எண்ணப்போக்குகளின்மீது செயல்விளைவை ஏற்படுத்தும் என்று அவர் நம்பியிருக்கலாம். உவமைகள் என்பதை மறைமுகமான போதனை செய்யும்படி வடிவமைக்கப்பட்டிருந்ததால்,*

*பரிசேயர்களை மாற்றுதல் என்பது இயேசுவின் அடிப்படை நோக்கமாயிருந்திருந்தால், அவர் அநேகமாக, ஒரு பரிசேயர் பற்றிய விவரிப்பை பயன்படுத்தியிருக்க மாட்டார் என்று எழுத்தாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர்.*

[40]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 179.

[41]*இந்த உவமை பற்றிய விரிவான ஒரு கலந்துரையாடலுக்கு அடுத்து வரும் "தேவனே, கிருபையாயிரும்!" என்ற பிரசங்கத்தில் காணவும்.*